REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர். அண்ணதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 2] சென்னை: சித்திரை 2உ வெள்ளி (15—4—55) ★ ★ வெளியூர்: சித்திரை 3உ சனி (16—4—55) [இதழ் 260

வடநாட்டு அகதிகள் வாழ்வுபெற 4 லட்சம் ஏக்கர் நிலம்!

இந்திய சர்க்கார் அகதிகள் புனர்வாழ்விப்பு இலாகா, மேற்கு பாகிஸ்தானிலிருந்து ஓடிவரும் அகதிகளுக்குப் புனர் வாழ்வமைத்துத் தருவதற்கென 4 லட்சம் ஏக்கர் சாகுபடி செய்யக்கூடிய நிலம், தோட்டங்கள் முதலியன தரும்படி இராஜஸ்தான் மாநில சர்க்காரைக் கேட்டுக்கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

இதுவரையிலும் மேற்கு பாகிஸ்தானிலிருந்து ஓடிவந்து, இந்தியாவில் தற்காலிக வசதிகளுடன் குடிபுகுந்துள்ள சுமார் 2 லட்சம் அகதிகளுக்கு நிரந்தரமான வசதிகளுடன் சில நிபந்தனைகளின் பேரில் அவர்களுக்குத் தரப்படும் நிலத்திறகு உரிமையாளர்களாகவும் ஆக்கப்படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

எட்டடி பாயும் தாயைப் பின்பற்றி குட்டி பதினறடி பாய்கிறது!

அசாம் மாநில அரசாங்க நிர்வாக ஊழல்!

பொதுமக்கள் வரிப்பணம் பல லட்சம் பாழ்!

தணிக்கை அறிக்கை தரும் தகவல்

'தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினறடி பாயும்,' என்பது போல, ஊழல் நிறைந்த இந்தியப் பேரரசின் நிர்வாக இலட்சணத்தைப் போலவேதான் மாநிலங்களின் நிர்வாக இலட்சணமும் இருக்கிறது என்பதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டாக, 'நான் இருக்கிறேன்,' என்று கூறியிருக்கிறது, அசாம் மாநில அரசாங்கம்! அரசாங்க நிர்வாகம் பற்றிய தணிக்கை அறிக்கை வெளியிட்டுள்ள தகவல்கள் இதை அறிவிக்கின்றன.

பல லட்ச ரூபாய்க்கு அரசாங்க உபயோகத்திற்கென 'கார்'கள், 'டிரக்கு'கள் வாங்கப்பட்டிருக்கின்றன; ஆனால் அவை எப்படி உபயோகிக்கப்படவேண்டும், எப்படி வாங்கப்படவேண்டும் என்பதற்கான விதிமுறைகள் இன்றுவரையில் வகுக்கப்படவில்லை. 1945 முதல், எல்லா கார்களும் அரசாங்க சிப்பந்திகளுக்கென இருந்து வருகின்றன.

எப்படி உபயோகிப்பது என்பதற்கான விதிமுறைகள் இல்லாததினல் பொதுமக்கள் பணம் எப்படிப் பாழாகிறது என்பதை தணிக்கை அறிக்கை சர்க்காருக்குச் சுட்டிக் காட்டியிருக்கிறதாம்.

இது பற்றி, ஆறுமுறை கடிதங்கள் எழுதியும், மாநில சர்க்கார் பதிலே எழுதவில்லையாம்.

மேலும், கல்வி பயலுவதற்கெனத் தரப்படும் கல்விக் கடன்கள் இனும் தொகைகள் முதலியனவற்றிற்கும் வழி முறையான விதிகள் வகுக்கப்படவில்லை என்றும், அதனல் எவ்வளவோ பணம் பாழாகியிருப்பதாயும் தணிக்கை அறிக்கை கூறுகிறது.

விதிகள் வகுக்கப்படாமையினல் ஒரு ஓய்வு பெற்ற சர்க்கார் அதிகாரி, தன் மகன் இந்தியாவில் படிப்பதற்கென ரூ 2,800 மானியமும், இங்கிலாந்தில் படிப்பதற்கென இரண்டு தடவைகள் ரூ 4,000 வீதம் மானியமும் பெற்றுவிட்டிருக்கிருர்.

மற்றுமொருவர், வெளிநாட்டில் தொழில் நுணுக்கப் பயிற்சி பெறுவதற்கெனக் கூறி மாதம் ஒன்றுக்கு ரூ. 250 வீதம், மூன்று ஆண்டு, மூன்று மாதங்களுக்கு தொகை பெற்றிருக்கிருர்.

மேலும், சர்க்கார் பொது மராமத்து இலாகாவின் ஆலோசனையின்றி பள்ளிக்கூடம் ஒன்றிற்கு சுமார் ரூ. 4,60,364 செலவில் கட்டிடம் கட்ட முற்பட்ட ஒரு கல்வி அதிகாரியினல், சர்க்காருக்கு ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது.

நிதி இலாகா விதிகளின்படி அத்தகைய பெருந்தொகைகளுக்கான கட்டிடங்கள், பொது மராமத்து இலாகாவின் அனுமதியின்றி கட்டப்படக் கூடாதென்பது அந்த அதிகாரிக்கு ஏனே தெரியாமல் போயிருக்கிறது.

அந்தக் கல்வி அதிகாரி பொது மராமத்து இலாகாவிடம்வேலையை ஒப்படைக்காதது மட்டுமின்றி, 'டெண்டர்கள்' மூலம்கூட கட்டிடத்திற்கான விபரங்கள் கோராமல் தனிப்பட்ட நிறுவனம் ஒன்றிடம் பேரம் பேசி கட்டிடத்தைக் கட்டி முடித்திருக்கிருர்.

பாதுகாப்பு ஏதுமின்றியே ரூ 2,18,786 வரை முன்பணம் தரப்பட்டிருக்கிறது.

சில ஒப்பந்தங்களில் ஒரு பாங்கியின் பெயர் காணப்படுகிறது; ஆனல், அந்தப் பாங்கி, பின்பு மூடப்பட்டதாகவும் தெரிகிறது.

(4-ம் பக்கம் பார்க்க)

ஆசிய-ஆப்பிரிக்க மாநாடு

பிரதிநிதிகளுக்கு விசேட பாதுகாப்பு

பாண்டுங்கில் நடைபெற இருக்கும் ஆசிய—ஆப்பிரிக்க மாநாட்டுக்குச் செல்லும் வழியில் சிங்கப்பூரில் தங்குகின்ற முக்கியமான எல்லா பிரதிநிதிகளுக்கும், விமான நிலையத்தில் விசேட வசதிகளும், பாதுகாப்புகளும் போலீசார் அளித்து வருவதாகத் தெரிகிறது.

* * *

'காஷ்மீர் இளவரசி' விமானம் நொறுங்கியதின் விளைவாக ஏற்பட்ட உயிர்ச் சேதங்களில் ஏற்கனவே கண்டுபிடிக்கப்பட்ட 3 பேர்களுடைய உடல்களுடன், மேலும் 6 பிணங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

தொழிலாளர் குடும்பங்கள் 'அறப்போர்'

95 தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டதின் எதிரொலி!

விசித்திர எதிர்ப்பு காட்டும் இதர தொழிலாளிகள் நிலை

இராஜ்கோட்டில் கைது செய்யப்பட்டுள்ள 95 ஆலைத் தொழிலாளரின் மனைவியர், குழந்தைகள் அடங்கிய குடும்பத்தினர், கைது செய்யப்பட்டுள்ள தொழிலாளர்கள் 48 மணி நேரத்திற்குள் விடுதலை செய்யப்படாவிட்டால், அந்தத் தொழிலாளர்கள், வேலை செய்யும் இராஜ்கோட் நூற்பு, நெசவு ஆலை முன்பு 'அறப்போர்' செய்யப்போவதாக 'பயமுறுத்தி' யிருப்பதாகத் தெரியவருகிறது.

எட்டுத் தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கிவிட்டதைக் கண்டிக்கும் வகையில், ஆலைக்குள்ளேயே சட்ட விரோதமாகக்கூடி ஆர்ப்பாட்டம் செய்ததாக அந்த 95 தொழிலாளர்களும் கடந்த வெள்ளியன்று கைது செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

விசித்திர எதிர்ப்பு

இந்த தொழிலாளர்கள் கைது செய்யப்பட்டதை எதிர்த்து இதர தொழிலாளர்கள் தங்கள் பகல் உணவை உட்கொள்ள மறுத்து விசித்திரமானதொரு எதிர்ப்புக்காட்டி வருகின்றனராம்!

144 தடை உத்தரவு: தொழிலாளர் மீறினர்

போலீசாருடன் கைகலப்பு; 92 பேர் கைது; ஐவர் காயம்

அமிர்தசரசில், மாஜிஸ்திரேட் விதித்த 144 தடையுத்தரவை மீறி தொழிலாளர்கள் ஊர்வலம் நடத்தியதை தடுத்து, கலைந்து போகுமாறு சொன்ன போலீசாருக்கும்—தொழிலாளருக்குமிடையே ஏற்பட்ட கலவரத்தின்விளைவாக, ஒரு போலீசார் உட்பட 5 பேர் காயமுற்றனராம்.

இதுவரையிலும், அமிர்தசரசில், இந்த 144 தடைஉத்தரவை மீறியதற்காக 92 பேர் கைது செய்யப்பட்டுள்ளனராம்.

சமுதாய அபிவிருத்தித்திட்டம், தேசிய விஸ்தரிப்பு திட்டம் ஆகியவற்றின்கீழ், நாட்டின் பல்வேறு பகுதிகளில், தற்போது மொத்தம் 828 அபிவிருத்தித் திட்ட வட்டாரங்கள் உள்ளன.

நூற்பு ஆலைக்குக் கடன் உதவி

சென்னைக்கு அளிக்கப்பட்ட தொகையை ஐந்தாண்டுகளில் திருப்பித்தர வேண்டுமாம்

டில்லி மேல் சபையில் ஆச்சாரியார் தகவல்

"திருநெல்வேலியில் உள்ள நூற்பு ஆலைக்கு வழங்கப்படுவதற்காக அனுமதிக்கப்பட்ட ரூ. 10 லட்சம் கடன் தொகையை சென்னை சர்க்கார் வாங்கிக் கொண்டுள்ளனர்; அதேமாதிரி குண்டக்கல்லில் உள்ள நூற்பு ஆலைக்கு அனுமதிக்கப்பட்ட 10 லட்சம் ரூபாய் கடன் தொகையை, ஆந்திர சர்க்கார் இதுவரை வாங்கிக்கொள்ளவில்லை: சென்னை சர்க்காருக்கு அளிக்கப்பட்டுள்ள கடன், ஐந்தாண்டுகளில் திருப்பித் தரப்பட வேண்டியதாகும்; முதல் தவணை 1954-நவம்பர் மாதத்தில் செலுத்தப்பட வேண்டும்," என்று மத்திய வர்த்தக, தொழில் மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி, டெல்லி மேல் சபையில், ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில் தெரிவித்தார்.

இது பற்றி, மேலும் ஒரு கேள்விக்குப் பதிலளிக்கையில், "கடன் தொகைகளை இந்திய சர்க்காருக்குத் திருப்பித் தர வேண்டியதற்கான பொறுப்பு மாநில சர்க்கார்களைச் சாரும் என்று அவர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது," என்று மந்திரி தெரிவித்தார்.

கைது செய்ய வந்த போலீசாரைத் தாக்கிய 'ஜன சங்க'த்தவர்!

ரிவால்வர் குண்டுகளால் கலைக்கப்பட்டனராம்

'அகாலி தள' ஊர்வலத்தின் மீது தடியடி-கண்ணீர்ப்புகை பிரயோகம்

அமிருதசரஸ், ஏப். 14—

இங்குள்ள 'ஜன சங்'கத்தைச் சேர்ந்த ஒருவரை போலீஸ் நிலையத்திற்குக் கைது செய்து அழைத்துச் செல்வதைத் தடுக்க 'ஜன சங்' ஆதரவாளர்களடங்கிய கூட்டத்தினர், போலீசாரைத் தாக்கியதாகவும், தற்காப்புக்காக, போலீஸ் சப் - இன்ஸ்பெக்டர் இரண்டு முறை ரிவால்வரால் கூட்டத்தை நோக்கிச் சுட்டு, கூட்டத்தைக் கலைத்ததாகவும் கூறப்படுகிறது

'அகாலி தள'த்தினர் நடத்திய ஊர்வலம் ஒன்றின்மீது செங்கல்லை வீசி எறிந்ததாக 'ஜன சங்'கத்தைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். அவ்வாறு கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்படுகையிலேயே மேற்படி சம்பவம் நடைபெற்றதாம்!

இருமுறை சுட்டதில் எவருக்கும் காயமோ, சேதமோ ஏற்பட்டதில்லை என்று அறிவிக்கப்படுகிறது.

இது சம்மந்தமாகப் போலீசார் 'அகாலி தள'த்தைச் சேர்ந்த 10 பேரையும் 'ஜன சங்'கத்தைச் சேர்ந்த 4 பேரையும் கைது செய்துள்ளனராம்.

பஞ்சாப் மொழி மாநில கோரிக்கையை வற்புறுத்தும் வகையில்

(4-ம் பக்கம் பார்க்க)

வரி விதிப்பை எதிர்த்து 3,000 விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

போலீசார் கண்ணீர்ப்புகை பிரயோகித்தனராம்

இத்தாலியைச் சேர்ந்த வெர்செல்லி பகுதியில், 3,000 விவசாயிகள், தங்களுக்கு விதிக்கப்பட்ட வரிகளை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அந்த விவசாயிகள் மீது போலீசார் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் நடத்தியிருக்கின்றனர்.

போலீசாரின் முன் எச்சரிக்கையால், இந்த நடவடிக்கையால், குறிப்பிட்டபடி, விவசாயிகள் தங்கள் ஆர்ப்பாட்டத்தில் வெற்றிகாண முடியாது போயிற்றும்.

ஏராளமான விவசாயிகள், ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள முடியாதவாறு துரத்தியடிக்கப்பட்டிருக்கின்றனர்.

விவசாயிகள் எவரும் கண்ணீர்ப் புகை பிரயோகத்தால் பாதிக்கப்படவில்லை என செய்திகள் கூறின.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 15—4—'55 வெள்ளி

சாக்கடைச் சகதி!

இறை வழிபாட்டிலிருந்து இறுதிச் சடங்குவரை, காலத்துக்கேற்ற மாற்றம் தேவை என்பதை அறிவுடையோர் ஒப்புவர். ஒவ்வொரு துறையிலும் அடுத்தடுத்து மாற்றம் ஏற்பட்டு வந்திருக்கிறது என்பதை ஏடுகளும், காணத்தகு நிகழ்ச்சிகளும் உறுதி செய்தவண்ணம் உள்ளன.

செப்பிலும் கருங்கல்லிலும் இறைவனைக் கண்டு களிக்கும் காலம், மனித வளர்ச்சியின் ஒரு கட்டத்தைக் குறிப்பிடுவதாகும். மற்றைய நாடுகள் மேற்குறித்த இறை வணக்க ஏற்பாட்டைவிட்டு விலகி சில நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. நாம் மட்டும் இன்னும், தொழுகை முறையைப் பொறுத்தவரையில், அச்சில நூற்றாண்டுகள் பின்தங்கியே கிடக்கிறோம்.

சிலை வணக்கமும், குறிப்பிட்ட சிலைகளுக்கு எழுதப்பட்டுள்ள புராணக் கதைகளும் தற்கால மனித அறிவுக்குப் பொருத்தமானதாக இல்லாது இருந்த போதிலும், இப்பொருந்தா நிலையைத் திட்டவட்டமாகத் தெரிந்திருந்த போதிலும்கூட, தெரியாதவர்கள்போல் தாங்கள் கற்றறிந்த திறத்தைத் துணைகொண்டு, ஆபாசக் கற்பனைக் கதைகளுக்கு விளக்கங் கூறியும், சிலை வணக்கத்திற்குத் தத்துவார்த்தம் தந்தும், மக்கள் அறிவு வளர்ச்சியையும், முன்னேற்றத்தையும தடுத்தும் கெடுத்தும் வருகின்றனர். எந்த அறிவும் அனுபவமும் மக்களின் முன்னேற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் அடிப்படையாக இருக்கிறதோ, அதே அறிவை மக்களின் வளர்ச்சியை மாய்ப்பதற்கும் அப்புராண அறிவாளர்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

பொய்வென்றதில்லை ; மெய் தோற்றதுமில்லை — தேய்ந்ததுமில்லை. அதற்கு மாறாக, பொய்மையின் வன்மைமிக்கத் தாக்குதல் அனைத்தையும் தவிடுபொடியாக்கி, உண்மை, உறுதி பெற்று தனது ஆற்றலை நிலை நாட்டியே வந்து இருக்கிறது. இந்த நடைமுறை உண்மையைக் காண மறுக்கின்றனர் பலர்—கண்ட சிலரும் சொந்த நலம் பெருக்கும் சதிகாரர்களாக, மக்களின் அறிவுக்கு அணை போட்டு வருகின்றனர்.

அவர்கள் மனித உருவில் உலாவும் குள்ளநரிக் கூட்டம்! இரத்த வெறி கொண்ட ஓநாய்க் கும்பல்!

குகையில் வாழ்ந்து, மரத்துக்கு மரம் தாவி வாழ்ந்து வந்த அக்கால மனிதன், தனது அச்சத்தின் விளைவாகவும், குறைந்த அறிவின் காரணமாகவும், இறை வணக்கத்தையும், தன்னுருவில் இறைவன் குடும்பத்தையும் ஆக்கினன். தான் ஆக்கினவற்றுக்கு அஞ்சலியும் செய்தான்—அஞ்சியும் வாழ்ந்தான்!

இயற்கைச் சம்பவங்களுக்கான காரணம் கண்டறிய காட்டு மனிதன் கண்ட முயற்சியே அறிவுத் துறை பணிதான் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இந்த வசதிக்குறைவு, அனுபவமின்மை, தன்னுருவில் இறைவனைக் கற்பிப்பதோடு அவனைக் கட்டுப்படுத்திவிட்ட போதிலும், இயற்கைச் சம்பவங்கள் யாதொரு காரணமுமின்றி நிகழ்கின்றன என நம்ப அவன் அறவே மறுத்துவிட்டான். எந்த ஒரு நிகழ்ச்சிக்கும் காரணம்உண்டென்பதும், அந்தக் காரணத்தைக் கண்டுபிடிக்க முயன்றான் மனிதன்; அந்தக் காரணத்தைக் கல்லுருக்கு ஏற்றியும், காட்டு மனிதன், தனக்கு இயல்பாக ஏற்பட்ட அறிவுப் பசியை மாற்றிக்கொண்டான். காட்டு மனிதனின் அறிவு நிலையைக்கூட அடைந்திருக்கவில்லை, கற்சிலைகளின் மூல உற்பத்தியை உள்ளவாறு அறிந்து, இக்காலத்தில் அவைகளை ஒதுக்கித் தள்ள வேண்டியதின் அவசியத்தை உணராது, உலகத்தை இயக்கும் ஆற்றல் படைத்தவர்கள்—அச்சிலைகள் என நம்பிக் கிடக்கும் அணு யுகத்தில் வாழும் மனித உருவங்கள்.

நிலக்கரியைத் தோண்டி எடுத்து நீராவியைப் பெருக்கி கிளைத்ததைசாதித்துக்கொண்டு, மேலும் மின்சாரத்தைக் கண்டறிந்து சுகத்தைப் பன்மடங்குக் கூட்டி, அணுவைக் கூறுகளாக்கி அதன் ஆற்றலால் அற்புத வாழ்வு வாழக் கற்றுக் கொண்ட மனிதன், விஞ்ஞானம் தந்த விளைவுகளின் சுகபோகத்தில் மலைப் பாம்புபோல் புரண்டுகொண்டு, திருநீற்றின் புனிதத்தையும், உத்திராக்கத்தின் உயர்வையும், பஞ்சாட்சரத்தின் பேராற்றலையும், கற்சிலையாக உள்ள அம்மை அப்பனின் அருள் திறத்தையும் அறிவித்துத் திரியும் அதிமேதாவிக் குன்றுகள், காரணமின்றி உலகத்தில் எதுவும் நிகழ்வதில்லை என முடிவுகட்டிய, குகை வாழ்ந்தக் காட்டு மனிதனிலும் மட்டங்கள்—மிகமிக மட்டங்கள். அவன் வானத்துப் புனித நீர்! இவைகள் சாக்கடைச் சகதி!

உரிமைகளுக்குப் போராடும் சுதந்திரம்

"அமெரிக்காவில், நீக்ரோக்களின் நிலைமை மிகவும் பரிதாபமாக இருக்கிறதென்று ரஷ்யப் பத்திரிகைகள் எழுதுகின்றன ; ரஷ்யாவில், எவரும் தங்கள் உரிமைகளுக்காகப் போராட முடியாது ; ஆனால், அமெரிக்க நீக்ரோக்களுக்கோ உரிமைகளுக்காகப் போராடும் சுதந்திரம் இருக்கிறது ; நாங்கள் எங்கள் உரிமைக்காகப் போராடும் போது, எங்களோடு எண்ணிறந்த வெள்ளையரும் சேர்ந்து எங்களுக்காகப் போராடுகிறார்கள்,"

என்று, 'சிகாகோ டிபண்டர்' என்ற நீக்ரோ இதழ் குறிப்பிட்டுவிட்டு, 'ரஷ்யாவிலிருந்து பத்திரிகை ஆசிரியர்கள் சிலர் அமெரிக்காவுக்கு வருகிறார்கள் ; அவர்கள், அமெரிக்காவில் நீக்ரோக்களின் நிலைமை எவ்வாறு இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வார்கள்,' என்று கூறியுள்ளது.

நிர்ப்பந்திப்போர் நிலைக்க இயலாது!

கருத்தைத் திணிக்க முயலுவது தகராறுகளுக்கே இடமளிக்கும்

முடிவு செய்யும் காலம் நெருங்குகிறதென்கிறார் நேரு

ஜெர்மானிய பத்திரிகைக்கு அனுப்பியுள்ள செய்தியொன்றில், இந்தியப் பிரதமர் நேரு குறிப்பிட்டுள்ளதாவது :—

"எந்த நாடும் மற்றொரு நாட்டின் மீது தன் கருத்தைத் திணிப்பதற்கு முயலக்கூடாது ; இதனால் ஏற்படும் தகராறுகளைத் தவிர்க்க முடியாததாகவே மாறிவிடும் ; இறுதியில், நிர்ப்பந்தம் செய்யும் நாடு உயிர்வாழவே இயலாத ஆபத்து ஏற்பட்டுவிடும்."

"உலகத்தையே அழித்துவிடக் கூடிய ஒரு அணுகுண்டு யுத்தத்தைத் தவிர்க்க விரும்பினால், சமாதானமாகச் சேர்ந்து வாழும் ஒரு வழியைப் பின்பற்றுவதற்கு மனித வர்க்கம் முடிவு செய்ய வேண்டிய கட்டத்துக்கு வந்துவிட்டது ; காரிய சாத்தியமான—சந்தர்ப்பவாத நோக்கத்துடன் பார்த்தாலும், சமாதானப் பாதையையே உலகம் பின்பற்ற வேண்டியிருக்கிறது.

தன்மான உணர்வு

நேரு தெளிவுறுகிறார்

"பல நூற்றாண்டுகளாக, உலக விவகாரங்களில், ஒரு 'அநாமதேய' நாடாக ஆப்பிரிக்கா கருதப்பட்டு வருகிறது ; இந்த நிலைமை ஒழியவேண்டும் ; இந்த நாடோ அல்லது கண்டமோ இன்றைய உலக நிலைமையில், தனித்து வாழ முடியாது ; எனவே, தன்மானத் தன்மையுடன் எல்லா நாடுகளுடனும் நேசமாக ஒன்றி வாழ்வதே ஆசிய—ஆப்பிரிக்க நாடுகளின் நோக்கமாகும்,"

என்று, எகிப்து பிரதமருக்கும், ஆப்கன் துணைப் பிரதமருக்கும் டில்லி மக்கள் அளித்த உபசார விருந்தில் தலைமை தாங்கிப் பேசுகையில் நேரு குறிப்பிட்டார்.

பழைய 'பல்லவி' பாடுகிறது லிஸ்பன்!

எல்லைப் பகுதிகளிலெல்லாம் இராணுவக் கொத்தளம்

அறப்போர் வீரர்களை அடக்க ஆயுத தளவாடங்கள் இறக்குமதி

கோவாவில், போர்ச்சுகீசிய அதிகாரிகள், அறப்போர் வீரர்கள் மீது கையாண்ட அடக்குமுறைகள் பற்றி ஆழ்ந்த கவலை தெரிவித்து இந்திய சர்க்கார் அனுப்பிய குறிப்புக்கு, அந்நாட்டின் அயல் நாட்டிலாகா அறிவித்துள்ள பதிலில், "இச்செய்கை, இந்தியாவிலுள்ள போர்ச்சுகீசிய மாகாணத்தின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிடுவதாகும்" என்று குறிப்பிட்டிருக்கிறது.

கோவாவிலுள்ள டாமன் பிரதேசம் முழுவதும் இராணுவக் கொத்தளமாக்கப்பட்டுள்ளதாம் ; அதன் எல்லைப் பிரதேசம் நெடுகிலும் துருப்புகள் நிறுத்தப்பட்டுள்ளதாம்!

விடுதலைத் தொண்டர் படையினரை எதிர்ப்பதற்காக போர்ச்சுகீசிய அதிகாரிகள், ஏராளமான ஆயுதங்களையும், தளவாடங்களையும் இறக்குமதி செய்துள்ளனரென ரூபிக்கப்படுகிறது.

ஆச்சரியமில்லையே!

இந்திய நாட்டில் ஆண்டு தோறும், ஒவ்வொரு மாடும் சராசரியில் 412 பவுண்டு பால் தருகிறதாம் ; ஆனால், பிரிட்டன் முதலான நாடுகளிலுள்ள மாடுகளோ 7,658 பவுண்டு பால் கறக்கின்றனவாம்!

'இந்தித் திணிப்பை நடைமுறைக்குக் கொண்டு வர இயலாததாகிவிடும்'

'ஆங்கில மொழி மீது அர்த்தமற்ற மனப்பான்மை கொள்ளக்கூடாது'

'போதன மொழியாக ஆங்கிலமே இருக்கவேண்டும்': பனம்பள்ளி கோவிந்தமேனன் உறுதி

"ஆங்கில மொழியைக் கற்பதில்—ஆங்கில மொழிக்குத் தர வேண்டிய முக்கியத்துவத்தைக் கொடுப்பதை நாம் நிறுத்துவதென்பது உண்மையிலேயே மிகமிக பரிதாபத்திற்குரிய ஒன்றாகும் ; இன்னும் பல ஆண்டு காலத்திற்கு ஆங்கில மொழிதான், நம் நாட்டில்—பள்ளிகள் கல்லூரிகளில் கல்விப் பயிற்சி பிரச்சினைகளிலும் முக்கியத்துவம் பெற்ற—நிரந்தரமான இடம் பெற்ற ஒரு மொழியாகத் திகழும் என்று உறுதி கூறுகிறேன் ; ஆங்கில மொழி மீது வெறுப்பு மனப்பான்மையை உருவாக்குவதில் எந்தவிதமான அர்த்தமும் கிடையாது."

இவ்வாறு திருவனந்தபுரத்தில் ஆங்கிலக் கல்விப் பயிற்சி நிறுவனம் ஒன்றைத் திறந்துவைத்துப் பேசுகையில் தி. கொ. மாநில முதலமைச்சர் பனம்பள்ளி கோவிந்த மேனன் கூறியிருக்கிறார்.

மேலும் அவர், 'நவீன இந்தியாவில், மொழி, கலை ஆகியவற்றில் இப்போது தீவிர எழுச்சி—வளர்ச்சி ஏற்பட்டுள்ளதென்றால், ஆங்கிலம் கற்றதுதான் அதற்கான காரணமாகும்' என்று குறிப்பிட்டார்.

"ஆங்கில மொழி, ஒரு சர்வதேச—உலக நாடுகள் அனைத்தும் வழங்கிவரும் ஒரு மொழி-தொழில் வர்த்தகத் துறைகளில்! தொழில், வர்த்தகத் துறைகளில் மட்டுமல்ல—விஞ்ஞானம், அரசியல், பொருளாதாரம், தத்துவம் ஆகிய எல்லாவற்றிலுமே ஆங்கிலம் இன்றியமையாத ஒரு மொழி ; இதனையே ஒரு முக்கியமான காரணமாகக் கொண்டுதான் சுவிட்சர்லாந்து, ஹாலந்து, பெல்ஜியம், டென்மார்க், நார்வே, சுவீடன் ஆகிய நாடுகளெல்லாம் ஆங்கில மொழியைத் தங்கள் போதன மொழியாக வைத்துக் கொண்டுள்ளன."

இவ்வாறு, குறிப்பிட்ட பனம்பள்ளி, பல்கலைக் கழகங்களிலும் இந்தி மொழி திணிப்பு குறித்துப் பேசுகையில் கூறியதாவது :—

"இந்த இந்தி மொழி திணிப்பு முறை இன்னும் சில ஆண்டுகளுக்கெல்லாம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட முடியாத ஒன்றாகத்தானிருக்கும்; இதற்கு மாறாக நாம், நமது மாநிலத்தில், உயர்தரப் பள்ளிகள் அனைத்திலும் போதன மொழியாக ஆங்கிலத்தையேதான் வைத்துக் கொள்ள வேண்டும்; எனவே நமது மாநிலத்திலுள்ள பள்ளிகள் அனைத்திலும், ஆங்கில மொழிக்கு எவ்வளவுக்கெவ்வளவு முக்கியத்துவம் தரமுடியுமோ அவ்வளவு முதலிடம் தந்து, உயர்நிலை பெற்றிருக்க வேண்டும்."

மருந்துவத் துறையில் மற்றொரு புரட்சி!

குடல் நோய், வயிற்றுப் போக்குக்கு 'இளநீர் ஊசி!

குடல் சம்பந்தமான நோய்களுக்கு இளநீரையும் ஒரு மருந்தாக உபயோகிப்பது குறித்து மூன்று இலங்கை டாக்டர்கள் ஆராய்ச்சி செய்துள்ளனர்.

வயிற்றுளைவு, வயிற்றுப் பொருமல், செருப்புக் காய்ச்சல் ஆகிய நோய்களால் பீடிக்கப்பட்ட 26 நோயாளிகளுக்கு 'இளநீர் ஊசி குத்துதல்' முறையை டாக்டர்கள் கையாண்டனராம் ; ஒருவரைத் தவிர மற்றவர்களெல்லோரும் இச்சிகிச்சையினால் குணமடைந்துவிட்டனராம் ; ஒருவருக்கு மட்டும் முதல் தடவை ஊசி போட்டதும், காய்ச்சல் சற்று அதிகமாகியதாம்! இந்தச் சிகிச்சை முறை வயிற்றுப் போக்குக்குக் கைகண்ட பலனை அளிக்கிறதென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரிசனங்களிடம் பாரபட்சம்!

150 ரூபாய் அபராதம்!

ஆமதாபாத், ஏப். 14—

பம்பாய் அரிசன அசௌகரிய நீக்கச் சட்டத்தின் கீழ், இங்குள்ள ஜவுளி மில் சிற்றுண்டி விடுதி மானேஜருக்கு, அரிசனத் தொழிலாளருக்கெனதனியேகோப்பைகள், பிளேட்டுகள் தனியாக வைத்திருந்ததின் மூலம் அவர்களைப் பாரபட்சமாக நடத்திய குற்றத்திற்காக ஒருநாள் சிறைத் தண்டனையும், ரூ 150 அபராதமும் மாஜிஸ்திரேட் விதித்தார். சிற்றுண்டி விடுதியைச் சேர்ந்த மற்றொரு நபருக்கும் ஒருநாள் சிறைத் தண்டனையும், ரூ. 21 அபராதமும், தவறினால் ஒரு வார சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

இந்து ஆலயத்தில் அரிசனத் திருமணம்

கும்பகோணம், ஏப். 13—

கும்பகோணத்திலுள்ள உப்பிலியப்பன் கோவிலில், அரிசனர் ஒருவரது திருமணம் சென்ற திங்கட்கிழமையன்று நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.

திருமணக் குழுவினர், மற்றவர்கள் சாதாரணமாகக் கோவில்களுக்குச் செலுத்துகின்ற கட்டணம் ரூ. 20-ம் செலுத்தினராம். திருமணத்திற்கு தேவையான நாதசுர, பக்க வாத்தியங்கள் உள்பட எல்லா வசதிகளும் அக்கோயிலிலேயே ஏற்படுத்தப்பட்டிருந்தன.

அக் கோயிலில் குடியிருக்கும் கடவுள்ஒருவரின் சமுத்திரில் கிடந்த மாலைகளும் மணமக்களுக்குச் சூட்டப்பட்டது.

மணமக்களுக்கென தனிப்பட்ட அர்ச்சனையும் செய்யப்பட்டதாம்!

அருப்புக்கோட்டைக்கு இரயில் வசதி

"அருப்புக்கோட்டைக்கும் விருதுநகருக்குமிடையே மானாமதுரை வழியாக இருப்புப்பாதை அமைக்க சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது ; இது தவிர, எங்கெந்த இடங்களிலெல்லாம் இருப்புப்பாதை வசதிகள் இல்லையோ அங்கெல்லாம் அவ்வசதி செய்து தரவும் திட்டமிடப்பட்டிருக்கிறது. இத்திட்டங்கள் அனைத்தும் இந்திய சர்க்காரின் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படும்,"

என்று முதலமைச்சர் காமராசர், விருதுநகரில், 4-வது தாலுகா அரசியல் மாநாட்டைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் மூன்று ஆண்டு காலத்தில், ஆண்டிற்குச் சராசரி 155 வீதம் தந்தி காரியாலயங்கள் புதிதாகத் திறந்து வைக்கப்பட்டன ; 1954 ஏப்ரல் மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரையுள்ள காலத்தில் மொத்தம் 130 தந்தி காரியாலயங்கள் புதிதாகத் திறந்துவைக்கப்பட்டன.

திராவிட நாட்டுப் போரணியின் தீப்பொறிகள்

★

மதுரை மாவட்டம்

மதுரை, ஏப். 10—

மதுரை மாவட்ட தி. மு. கழக கிளைச் செயற்குழுத் தேர்தல் இன்று மாலை 3 மணிக்கு மதுரை விக்டோரியா எட்வர்டு மண்டபத்தில் தேர்தல் ஆணையாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்டவர்கள் மாவட்ட செயற்குழு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் :—

செயலாளர் : எஸ். முத்து—மதுரை.

துணைச் செயலாளர் : தா. ஆவுடையப்பன்—சோழவந்தான்.

பொருளாளர் : இ. காத்தான்—நிலக்கோட்டை.

பொதுக் குழுவுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகள் வருமாறு :—

1. தா. ஆவுடையப்பன், சோழவந்தான்.
2. எஸ். முத்து, மதுரை.
3. எஸ். எஸ். இராஜேந்திரன், சேடப்பட்டி.
4. ல. தனுஷ்கோடி, உசிலம்பட்டி.
5. கே. விக்ரமாதித்தராசன், திண்டுக்கல்.
6. கே. ஏ. கலையழகன், வண்டிப் பெரியார்.
7. எம். எஸ். பால்ராஜ், ஆண்டிப்பட்டி.
8. ஜி. கந்தசாமி, தேவாரம்.
9. இருளப்பன், அய்யம்பாளையம்.
10. கு ப ம. தர்மன், பி.காம்., திருமங்கலம்.

★

நெல்லை மாவட்டம்

நெல்லை, ஏப். 10—

நெல்லை மாவட்ட தி. மு. கழக கிளை செயற்குழு தேர்தல், இன்று காலை 10 மணிக்கு, நெல்லைச் சந்திப்பு தி.மு.கழக அலுவலகத்தில், தேர்தல் ஆணையாளர் தோழர் ஏ. பி. தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது

கீழ்க்கண்டவர்கள் மாவட்டச் செயற்குழு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் :—

செயலாளர் : கே. வி. கே. சாமி—தூத்துக்குடி

துணைச் செயலாளர் : டபிள்யூ டி. துரைசாமி—கோவில்பட்டி

பொருளாளர் : பி. எஸ். கே. ஜெயபால்—நாசரேத்.

பொதுக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகள் வருமாறு :—

1. கே. வி. கே. சாமி, தூத்துக்குடி.
2. எம். எஸ். சிவசாமி, தூத்துக்குடி.
3. கே. செல்லையா, வேப்பலோடை.
4. பி. எஸ். கே. ஜெயபால், நாசரேத்.
5. டபிள்யூ. டி. துரைசாமி, கோவில்பட்டி.
6. சு. கந்தசாமி, விக்கிரமசிங்கபுரம்.
7. மு. சபாபதி, குளத்தூர்.
8. டி. ஆர். சுப்பிரமணியம், சங்கரன்கோவில்,
9. தனசேகரன், பார்குளம்.
10. வீரபாகு, திருநெல்வேலி சந்திப்பு.

★

இராமநாதபுரம் மாவட்டம்

இராமநாதபுரம், ஏப். 10—

இராமநாதபுர மாவட்ட தி. மு கழகக் கிளை செயற் குழு தேர்தல் இன்று மாலை 3 மணிக்கு, விருதுநகர் நாடார் பரிபாலன சங்கக் கட்டிடத்தில், தேர்தல் ஆணையாளர் தோழர் தில்லை-வில்லாளன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்டவர்கள் மாவட்ட செயற் குழு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் :—

செயலாளர் : இ. ல ம சௌந்திர பாண்டியன்—கமுதி

துணைச் செயலாளர்: து.உ. இராமநாதன்—மானாமதுரை.

பொருளாளர் : வி. பி. வடிவேல்—விருதுநகர்.

பொதுக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகள் வருமாறு :—

1. எஸ். எஸ். தென்னரசு திருக்கோட்டியூர்.
2. எம். எஸ். இராமசாமி, அருப்புக்கோட்டை.
3. ஏ. வி. பி. ஆசைத்தம்பி, விருதுநகர்.
4. முகவை-ஆர். எஸ். பாண்டியன், சென்னை.
5. சிவசண்முகசுந்தரன், திருநகரம்.
6. சு. பாலகிருஷ்ணன், இராசபாளையம்.
7. நவ மார்க்கண்டேயன், இராசசிங்கமங்கலம்.
8. இ. ல. ம. சௌந்திர பாண்டியன், கமுதி.
9. உத்தண்டன், விருதுநகர்.
10. என். கே குருசாமி, விளாம்பட்டி.

★

வட ஆற்காடு மாவட்டம்

ஆம்பூர், ஏப். 10—

வடஆற்காடு மாவட்ட தி. மு. கழகக் கிளை செயற்குழு தேர்தல், இன்று மாலை 2½ மணிக்கு, ஆம்பூர் நகர தி. மு. கழக அலுவலகத்தில் தேர்தல் ஆணையாளர் தோழர் என். வி நடராசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்டவர்கள் மாவட்டச் செயற்குழு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் :—

செயலாளர் : எம். பி. சத்தி—முல்லை கொம்மை

துணைச் செயலாளர் : அ. கருத்தோவியன்—வேலூர்.

பொருளாளர் : கன்னையன்—ஆரணி.

பொதுக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகள் வருமாறு :—

1. சி. பி. சிற்றரசு, திருச்சி.
2. ப. உ. சண்முகம், திருவண்ணாமலை.
3. முல்லை — சத்தி, முல்லை கொம்மை.
4. போளூர்-சே. சுப்பிரமணியம், போளூர்.
5. க. நெடுஞ்சோழன், திருப்பத்தூர்.
6. கருத்தோவியன், சருகம்புத்தூர்.
7. முல்லை – வடிவேலு, முல்லை கொம்மை.
8. ஆற்காடு-வில்வம், சென்னை.
9. எம். பி. சாரதி, வேலூர்.
10. எஸ். என். ராசன், சந்தைப் புதுப்பாளையம்.

★

செங்கற்பட்டு மாவட்டம்

காஞ்சிபுரம், ஏப். 10—

செங்கற்பட்டு மாவட்ட தி மு கழகக் கிளை செயற்குழு தேர்தல் இன்று மாலை 2½ மணிக்கு, காஞ்சிபுரம், 'திராவிட நாடு' நிலையத்தில், தேர்தல் ஆணையாளர் தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்டவர்கள் மாவட்டச் செயற்குழு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் :—

செயலாளர் : கே. டி. எஸ். மணி—காஞ்சிபுரம்.

துணைச் செயலாளர் : ஜே. ஏ. வகாப்—செங்கற்பட்டு

பொருளாளர்: ஒய். என். இராமலிங்கம் — உமையாள்பரணஞ்சேரி.

பொதுக்குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகள் வருமாறு :—

1. சி என். அண்ணாதுரை, காஞ்சிபுரம்.
2. சி. வி. எம். அண்ணாமலை, காஞ்சிபுரம்.
3. ஏ. கிருஷ்ணன், புதுகும்மிடிபூண்டி.
4. டி. கே. போளூரான், திருமழிசை.
5. கே. டி. எஸ். மணி, காஞ்சிபுரம்.
6. பா. சு மணி, ஆரணி.
7. என். ஜி. கண்ணப்பன், மாங்காடு.
8. இராம. அரங்கண்ணல், காஞ்சிபுரம்.
9. ஒய். என். இராமலிங்கம், உமையாள்பரணஞ்சேரி
10. ஈழத்து அடிகள், காஞ்சிபுரம்

★

தஞ்சை மாவட்டம்

தஞ்சை, ஏப். 10—

தஞ்சை மாவட்ட தி. மு கழகக் கிளை செயற் குழுத் தேர்தல் இன்று காலை 11 மணிக்கு மாயவரம் நாடார் சத்திரம் இரயிலடியில், தேர்தல் ஆணையாளர் தோழியர் சத்தியவாணிமுத்து தலைமையில் நடைபெற்றது.

கீழ்க்கண்டவர்கள் மாவட்டச் செயற் குழு நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் :—

செயலாளர் : என். எஸ் இளங்கோ—அதிராம்பட்டினம்.

துணைச் செயலாளர்: பி நாராயணசாமி—மன்னார்குடி.

பொருளாளர்: ஏ. வி. பதி—தஞ்சாவூர்.

பொதுக் குழுவிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாவட்டப் பிரதிநிதிகள் வருமாறு :—

1. என். எஸ். இளங்கோ, அதிராம்பட்டினம்.
2. மு கருணாநிதி சென்னை.
3. சே. கே. நீலமேகம், குடந்தை.
4. அடைக்கலம், பேராவூரணி.
5. என். கிட்டப்பா, மாயவரம்.
6. எஸ். பெத்தண்ணன், தஞ்சை.
7. பி. நாராயணசாமி, மன்னார்குடி.
8. வி. சுப்பிரமணியம், திருத்துறைப்பூண்டி.
9. ஏ. சந்தானம், கீவளூர்.
10. வி. பராங்குசம், கும்பகோணம்

சென்னையிலா தொழிற்சாலை?

ரூ. 2 கோடி மூலதனத்தில் ஏற்படுமா?

இந்தியாவிலேயே எஃகு 'டியூப்'களை உற்பத்தி செய்வதென்ற திட்டத்தின்கீழ், அத்தொழிற்சாலையை சென்னையிலேயே ஏற்படுத்தத் திட்டமிட்டிருப்பதாக 'பர்மிங்காம் டியூப் இன்வெஸ்ட்மெண்ட்ஸ் கம்பெனி'யின் நிர்வாக டைரக்டர், சென்னையில், பத்திரிகை நிருபர்களிடம் கூறியுள்ளார்.

இரண்டாண்டு காலத்திற்குள் இத் தொழிற்சாலை ஏற்படுத்தப்படுமென்றும், சுமார் ரூ. 2 கோடி மூலதனம் போடவேண்டியிருக்குமென்றும் அவர் குறிப்பிட்டார்.

உரிமை கொண்டாட முடியாது?

பம்பாய், ஏப் 12—

"உயர்ந்த பதவிகளுக்கு வெளியாட்களை நியமிப்பதற்கு நிர்வாகத்தினருக்கு உரிமை உண்டு; உயர் பதவிகளுக்குத் தங்களுக்கு உத்தியோக உயர்வளிக்க வேண்டுமென்று தொழிலாளர் உரிமை கொண்டாட முடியாது,"

என்று, இங்குள்ள தொழில் தகராறு அப்பீல் மன்றம், சௌராஷ்டிராவிலுள்ள ஒரு மருந்துக் கம்பெனி தாக்கல் செய்த அப்பீலின் மீது தீர்ப்பளிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

அணுகுண்டைத் தயாரிக்காதாம்!

ஆக்க வேலை ஆராய்ச்சியிலேயே பிரான்ஸ் ஈடுபடுமாம்!

பிரெஞ்சுப் பிரதமர் எட்கர் பௌரி நிருபர்கள் மாகாநாட்டில் குறிப்பிட்டுள்ளதாவது :—

"இராணுவக் காரியங்களுக்கு அணுசக்தி ஆராய்ச்சிகளை உபயோகிக்காமலிருக்க பிரெஞ்சு சர்க்கார் முடிவு செய்துவிட்டது; ஆக்க வேலைகளுக்கும், தொழில்களுக்கும் மட்டுமேதான் அணுசக்தி ஆராய்ச்சிகளை பிரான்ஸ் பயன்படுத்தும்; அணுகுண்டோ, நீர்வளிக் குண்டோ தயாரிக்க எங்களுக்கு உத்தேசம் கிடையாது," என்றார்.

"பறக்கும் தொட்டி."

வாஷிங்டன், ஏப். 12—

புதிய வகை 'ஹெலிகாப்டர்' விமானம் ஒன்று செய்யப்பட்டு, அமெரிக்கக் கடற்படையால் பறக்க விடப்பட்டது; அது, தரையிலிருந்து நேரே மேலே கிளம்பும்; அதன்பின் பறந்து செல்லும்.

அதன் இயந்திரம் ஒரு தொட்டியைப் போன்றதாக இருப்பதால், அது, 'பறக்கும் தொட்டி' எனப்படுகிறது. தொட்டி போன்ற மேடையில் அதை இயக்குகிறவர் நிற்பார். இதற்கு சிறகு, வால் முதலியவை இல்லை.

இதற்கு, நூறு குதிரைத் திறன் கொண்ட இரண்டு எஞ்சின்கள் உள்ளன; இரண்டு விசிறிகள் அதை மேலே எழும்படி செய்கின்றன; அந்த விமானத்தை இயக்குகிறவர், நேரே நின்று, எந்தத் திசை போக வேண்டுமோ அந்தத் திசைக்கு நேரே தம் உடல் பாரம் சாயும்படி செய்து, நினைத்த திசைக்கு நேரே பறக்கலாம்.

ரூ. 16-லட்சம் நஷ்டம்!

"1954—55ம் ஆண்டில், மத்திய சர்க்கார் கையிருப்பிலிருந்து 1,23,000 டன் அரிசி கொடுக்கப்பட்டது; விற்பனையில் ரூ. 15,84,733 நஷ்டம் ஏற்பட்டது,"

என்று, மக்கள் சபையில், கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், உணவு மந்திரி குறிப்பிட்டார்.

மத்திய சமூகநலக் குழுவின் ஆதரவின்கீழ் நடத்தப்பட்டுவரும் 'நஜப்கார்' தீப்பெட்டித் தொழிற்சாலையின் மூலம், தற்போது மொத்தம் 500 பெண்கள் ஒய்வு நேர வேலை பெற்றுவருகின்றனர்.

★★

தலைமைக் கழகம் : அறிக்கை—8/55

தி. மு. கழக மாவட்டக் கிளைத் தேர்தல்

மாவட்டம்	தேர்தல் நாள்	நேரம்	இடம்	தேர்தல் ஆணையாளர்
சென்னை	17—4—55	காலை 9 மணி	'அறிவகம்', இராயபுரம், சென்னை—13	ஏ. வி. பி. ஆசைத்தம்பி
தென் ஆற்காடு	17—4—55	மாலை 3 மணி	அமராவதி பங்களா (தபால் நிலையத்துக்கு அருகில்) நெல்லிக்குப்பம்	எம். எஸ். இராமசாமி
சேலம்	17—4—55	காலை 10 மணி	'சாந்தி நிகேதன்', கோயமுத்தூர் லாட்ஜ், சேலம்	காஞ்சி-கல்யாணசுந்தரம்
கோவை	17—4—55	காலை 10 மணி	தி. மு. கழக அலுவலகம், கடை வீதி, ஈரோடு	மதுரை எஸ். முத்து
திருச்சி	17—4—55	காலை 10 மணி	'கருணாநிதி பார்க்', என். எஸ். பங்களா, திருச்சிராப்பள்ளி	என். எஸ். இளங்கோ
நாஞ்சில்	17—4—55	காலை 10 மணி	தி. மு. கழக அலுவலகம், வடசேரி, நாகர்கோயில்	சி. பி. சிற்றரசு

"அறிவகம்", சென்னை
4—4—'55

சி. என். அண்ணாதுரை
பொதுச்செயலாளர், தி. மு. க.

★★

புதிய கல்விச் சட்டத்தை எதிர்த்து பல்லாயிரவர் ஆர்ப்பாட்டம்

மாநிலங்களிடமிருந்து அதிகாரங்களைப் பறிக்கும் போக்கிற்குக் கண்டனம்

எதிர்ப்பை அடக்க ஆயுதப் போலீசார் விரைந்தனர்

ஜோகன்ஸ்பர்க், ஏப். 14—

தென்னாப்பிரிக்க சர்க்கார், கல்வி சம்பந்தமான பொறுப்புகளனைத்தையும் மாநில சர்க்கார்களிடமிருந்து பறித்து, தனது அதிகாரத்திற்கு உட்பட்ட உள்நாட்டிலாகாவிடம் ஒப்படைத்துள்ள 'பாண்டு கல்விச் சட்டத்தை' எதிர்த்து, ஜோகன்ஸ்பர்கிற்கு அருகிலுள்ள பிந்னூலி என்னுமிடத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டெழுந்தனர்; அவர்களைக் கலைப்பதற்காக ஆயுதந்தரித்த போலீசார் விரைந்தனர்.

தற்போது அங்குள்ள சூழ்நிலைகள் மிகவும் அச்சுறுத்தக் கூடியதாக இருப்பதாகவும், நிலைமையைச் சமாளிப்பதில், போலீஸ் அதிகாரி, வெள்ளை — நீக்ரோ போலீசாருடன் மிக தீவிரமாக ஈடுபட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

போலீசார் பல பிரிவினராகப் பிரிக்கப்பட்டுள்ளனராம்.

போலீசாரை வைது கொண்டும், கேலி மொழிந்து கொண்டும் பல சிறுவர் கூட்டத்தினர் ஓடினராம்!

ஒருவாறாகப் போலீசார் நிலைமையைச் சமாளித்திருக்கின்றனர்; எனினும், தற்போது அங்கு பலத்த போலீஸ் காவல் நிறுத்தப்பட்டுள்ளதாம்.

* * *

லண்டன், ஏப் 14—

சென்ற புதன்கிழமையன்று லிவர்பூலில் நடைபெற்ற கிறித்துவ நிறுவனங்கள், கோயில்கள் ஆகியவற்றின் பொதுச் சபை, தென் ஆப்பிரிக்க சர்க்காரின் இத்தகைய வெறிச் செயலையும், பாண்டு கல்விச் சட்டத்தையும் ஆட்சேபித்துத் தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றது.

சீனு வேண்டுகோள்

உள்நாட்டு கலகக்காரர்களின் சதியாலோசனைகளையெல்லாம் மிகக் கூர்மையாகக் கவனித்து எச்சரிக்கையுடன் இருக்கும்படி இந்தோனேஷிய சர்க்காரை, நவ சீனு கேட்டுக்கொண்டுள்ளது.

கயாவுக்கு 'யாத்திரை' சென்றவருக்கு கைமேல் 'பலன்'?

எத்தனிடம் ஏமாந்த ஆசிரியர் திகைப்பு

கயாவுக்கு யாத்திரை சென்ற குண்டூரைச் சேர்ந்த ஒருவர் தமது பயணத்தை முடித்துக்கொண்டு வீடு திரும்புகையில், தான், இனம் தெரியாத ஒருவனால், ரூ. 500 மோசடி செய்யப்பட்டதை அறிந்து போலீசில் புகார் செய்துள்ளார்.

35 வயதுள்ள சேஷாச்சாரி என்ற அவர், இந்து உயர்நிலைப் பள்ளி ஆசிரியராவார். தமது ஊராகிய குண்டூரிலிருந்து தமது குடும்பத்தினருடன் யாத்திரை தொடங்கி காசிக்குச் சென்றார்; மார்ச் 26-ந் தேதியன்று கயாவுக்குச் சென்று, பின்னர் அங்கிருந்து அவர் கல்கத்தாவிற்குப் புறப்பட்டார்; கயாவிலிருந்து புறப்படுகையில் வாசன் என்று தன் பெயரைக் கூறிக் கொண்ட ஒரு நபர், அவரிடம் மிக நெருங்கிப் பழகியிருக்கிறார். சேஷாச்சாரி கல்கத்தாவிற்குச் செல்வதற்கு, இரயிலில் அவரது பெட்டிகளையும், படுக்கைகளையும் ஏற்றிவைப்பது, மற்றும் இவை போன்றவற்றிற்காகப் போர்ட்டர் கூலிகளை தானே அமர்த்துவது ஆகியவற்றில் அவருக்கு உதவி புரிந்தார். சேஷாச்சாரியின் குடும்ப விவகாரங்கள் அனைத்தும் தமக்கு நன்றாகத் தெரியும் என்று காட்டிக் கொண்டார். தன்னுடைய சகோதரர் வெங்கடரத்னம் குண்டூர்—பெசவாடா இரயில் மார்க்கத்தில் டிக்கெட் பரிசோதகர் என்றும், அவரைச் சந்திக்கத் தாம் குண்டூர் செல்ல எண்ணியிருப்பதாகவும், அங்கு சேஷாச்சாரியை தாம் சந்திப்பதாகவும், கூறி, அவருடைய முகவரியைக் கேட்டறிந்துவிட்டு, பின்னர் பிரிந்துவிட்டார்.

மார்ச் மாதம் 28-ந் தேதியன்று, சேஷாச்சாரி தன் வீட்டிற்குச் சென்று கொண்டிருக்கையில், குண்டூரிலிருந்த அவரது தாயாருக்கு, அவருடைய பேரன் திவாகர் (யாத்திரீகர் குழுவில் ஒரு நபர்) அபாயகரமான நிலையில் இருப்பதாகவும், எனவே, மருத்துவச் செலவுக்காக ரூ. 500 தந்தி மணியார்டரில் 'பிரின்ஸ் லாட்ஜ், கரீம் கஞ்ச், கயா' என்ற முகவரிக்கு அனுப்பும்படியும் கேட்டுக்கொண்டு வந்த தந்தி ஒன்றைக் கண்டதும் திகிலடைந்து, அவரது அன்னையார் தந்தியில் குறிப்பிட்டிருந்த முகவரிக்கு ரூ 500 அனுப்பியிருக்கிறார்.

இதற்கிடையில், வீடு வந்து சேர்ந்த தனது மகனையும் பேரனையும் கண்ட அந்த அம்மையார் ஆனந்தமுற்று, பேரனது உடல் நிலை பற்றியும், தான் அனுப்பிய ரூபாய் பற்றியும் கேட்டிருக்கிறார். இதைக்கேட்ட சேஷாச்சாரி அப்படியே திகைப்புற்று விட்டார்.

கயா இரயில் வண்டி நிலையத்தில், தான் சந்தித்த வாசன் என்பவன் ஒரு வேளை இந்த எத்தனாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் அவர் போலீசில் புகார் செய்திருக்கிறார். போலீஸ் புலன் விசாரணை நடைபெற்று வருகிறதாகக் கூறப்படுகிறது.

டெலிபோன் இணைப்புகள்

மக்கள் சபையில் தகவல்

"1954-ம் ஆண்டில், புதிதாக 18,232 டெலிபோன் இணைப்புகளுக்கு ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது; நடப்பு ஆண்டில் புதிதாக மேற்கொண்டு 20,000 இணைப்புகளுக்கு ஏற்பாடு செய்து கொடுக்க இயலும்; நாடு முழுவதிலும் சுமார் 14,100 விண்ணப்பங்கள் இன்னமும் பைசல் செய்யப்பட இருக்கின்றன," என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

கைவிட்ட காதகன் வீட்டின் முன்பு 'கன்னிப் பெண்' போராட்டம்!

கருப்புக்கட்டி வியாபாரத்தால் வந்த வினை

தென் திருவாங்கூர் தக்கலைக்கருகிலுள்ள கக்குறிச்சி எனும் கிராமத்தில், ஸ்தனிஸ்லாஸ் எனப்படும் ஒரு வாலிபரது வீட்டின்முன் 18 வயதுடைய மரியநேசம்மை எனப்படும் 8 மாத கர்ப்பிணி மங்கையொருவர் கடந்த 2, 3 நாட்களாக சத்தியாக்கிரகம் செய்து வருகிறாராம்.

அப்பெண்மணி கருப்புக்கட்டி காய்ச்சும் தொழில் புரியும் ஒரு ஏழை குடும்பத்தைச்சேர்ந்தவரென்றும், காய்ச்சின கருப்புக் கட்டியை, ஸ்தனிஸ்லாஸ் என்ற அந்த வாலிபர் வாங்கி தக்கலை மடத்திற்குக் கொண்டுசெல்வது வழக்கமென்றும்; இப்படியே மூன்று ஆண்டுகளாக நடைபெற்று வரும் காலை, ஒருநாள், அப்பெண்மணியின் வீட்டில் அவரது பெற்றோரோ, மற்றோரோ யாருமில்லா நேரத்தில் அப்பெண்மணியைக் கற்பழித்ததாகவும், கண்ணீர் வழிந்த நிலையுடன் அப்பெண்மணி கூறினாராம்.

மேற்படி நபர், தம்மிடம், 'எதற்கும் அஞ்ச வேண்டாம்; உன்னைத் தான் நான் மணந்துகொள்வேன்' என்று வலது கையடித்து சத்தியம் செய்ததாகவும் கூறப்படுகிறது.

இதுபற்றி அப்பெண்மணி குறிப்பிடுகையில், வலதுகையை அடித்து சத்தியம் செய்ததுடன் மட்டுமல்லாமல், அவர், தன்னுடைய சொத்துக்களின் ஆதாரங்களையும் கொண்டுவந்து உறுதி கூறினாரென்றும், அவரை நம்பித் தானும் அவருக்கு உடன்பட்டதாகவும் தற்போது தாம் 8 மாத கர்ப்பிணியாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

தற்போது ஸ்தனிஸ்லாசின் பெற்றோர், அவருக்கு வேறு ஒரு பெண்ணை மணமுடித்து வைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருவதாகவும், எனவே அதனை தடுத்துநிறுத்தி, தம்மையே அவர் மணந்துகொள்வார் என்ற உறுதியின்பேரில் அப்பெண்மணி அவர் வீட்டின்முன் சத்தியாக்கிரகம்செய்வதாகவும் கூறப்படுகிறது.

கைது செய்ய வந்த...

(1-ம பக்கத்தின் தொடர்ச்சி)

'அகாலி தள'த்தவர் நடத்திச் சென்ற ஊர்வலத்தினர் மீதும் போலீசார் தடியடிப் பிரயோகமும், கண்ணீர்ப் புகைப் பிரயோகமும் செய்தனராம்.

மாநில புனரமைப்புக் குழு தனது சிபாரிசுகளைச் செய்யுமுன்னர் 'அகாலி தளம்' எவ்வித நடவடிக்கையிலும் ஈடுபடாது என்று முன்னர் ஒருமுறை 'அகாலி தள' தலைவர் மாஸ்டர் தாராசிங் கூறியிருந்தது இங்கு கருதத்தக்கது.

இந்தியாவில், 1954-ம் ஆண்டில் 3,40,000 டன் அம்மோனியம் சல்பேட் உரமும், 1,05,000 டன் சூபர் பாஸ்பேட் உரமும், 400 டன் பொட்டாஷியம் நைட்ரேட் உரமும் உற்பத்தி செய்யப்பட்டது; அவற்றில், அம்மோனியம் சல்பேட் உரம் சிந்திரியிலும், மற்றவை முழுவதும் தனியார் துறையிலும் உற்பத்தி செய்யப்பட்டன.

கழகக் கூட்டங்கள்

★

சென்னை

புளியந்தோப்பு, பார்த்தசாரதி நாயுடு தெருவில்

17—4—55 மாலை 5½ மணிக்கு

பேசுவோர்:

என். வி. நடராசன்

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

கே. எம். கண்ணபிரான்

★

காங்கயம்

திருப்பூர் ரோடு, முத்து திடலில்

17—4—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: எம். வேலுசாமி

பேசுவோர்:

இராம. அரங்கண்ணல்

ப. நாராயணன்

★

திருச்சி

கல்லுக்குழி திடலில்

17—4—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: எம். எஸ். மணி

பேசுவோர்:

என். எஸ். இளங்கோ

ப. உ. சண்முகம்

ஆற்றலழகன்

திருக்குறள் வகுப்பு

★

16—4—55 பிற்பகல் 2-30 மணிக்கு, சென்னை, பெத்துநாய்க்கன்பேட்டை, முத்துகிருஷ்ணன் தெரு, 15-ம் எண்ணுள்ள இல்லத்தில், தாய்மார் கழகச் சார்பில், 'துறவு' எனும் அதிகாரம் குறித்து, திரு. மயிலை சிவமுத்து, திருமதி தாமரைக்கண்ணி ஆகியோர் பேசுவர்.

திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகம்

★

16—4—55 மாலை 5 மணிக்கு, சென்னை, பெத்துநாய்க்கன் பேட்டை, லாயர் சின்னதம்பி முதலி தெரு, 10-ம் எண்ணுள்ள மேற்படி கழகக் கட்டிடத்தில் தோழர் சி. ஆர். பாலசுந்தரம் தலைமையில், 'வெங்கண்ணு' என்ற நாடக துவக்க விழா நடைபெறும்.

பேராசிரியர் சுந்தரம் பிள்ளை நூற்றாண்டு நிறைவு விழா

17—4—55 காலை 10 மணிக்கு சென்னை, திருவல்லிக்கேணி, கே. எஸ் பாண்டியன் படிப்பகத்தில் நடைபெறும். தோழர்கள் பலர் பேசுவர்.

திரு. வி. க. இலக்கிய மன்றம்

17—4—55 மாலை 6 மணிக்கு. சென்னை, வண்ணை, சர். தியாகராயர் கல்லூரியில், மேற்படி மன்றத்தின் முதலாண்டு நிறைவு விழா திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் தலைமையில் நடைபெறும். திரு ரா. பி. சேதுப்பிள்ளை, திரு.நாரண துரைக்கண்ணன், திரு ஓ. ராமகிருட்டினசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

திருச்சி மாவட்ட தாழ்த்தப்பட்டோர் நல சங்கம்

17—4—55 காலை 10 மணிக்கு, திருச்சி, தேவர் மன்றத்தில், திரு எஸ். சி. நாயக் தலைமையில் மேற்படி சங்கத்-திறப்பு விழா நடைபெறும். திரு. ஆர். எஸ். மலையப்பன் சங்கத்தைத் திறந்து வைப்பார்.

திருமணம்

17—4—55 காலை 9 மணிக்கு, சென்னை, மயிலை, தென் மாட வீதி, 16-ம் எண்ணுள்ள வன்னியர் சத்திரத்தில், தோழர் என். வி. சதானந்தம்—தோழியர் சொக்கம்மாள், தோழர் எம். பி. இராஜு—தோழியர் இலட்சுமி திருமணங்கள், தோழர் க. அப்பாதுரை தலைமையில் நடைபெறும் தோழர்கள் முகவை ஆர். எஸ். பாண்டியன், இறையண்ணல் ஆகியோர் பேசுவர்.

தி. மு. கழக சென்னை மாவட்ட உறுப்பினர்கட்கு

"பொதுச்செயலாளர் அவர்களின் அறிக்கையின்படி, 17-4-55 காலை 10 மணிக்கு, தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி தலைமையில், இராயபுரம், 'அறிவகத்'தில் நடைபெற இருக்கும் சென்னை மாவட்ட தி. மு. கழக நிர்வாகிகள் தேர்தலில் சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த எல்லா கிளைக் கழகங்களிலிருந்தும் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் மாவட்ட உறுப்பினர்கள் யாவரும் கலந்துகொள்ள வேண்டுகின்றேன்.

"தேர்தல் நாளன்று வாக்குரிமையுள்ள உறுப்பினர்கள் அனைவரும் தலைமைக் கழகத்திலிருந்து அனுப்பப்பட்ட சான்றுச் சீட்டை உடன் ஏந்தி வர வேண்டும்,"

என, சென்னை மாவட்ட தி.மு. கழகச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் அறிவிக்கிறார்.

ஒய்.எம்.சி.ஏ. பட்டி மன்றம்

16—4—55 மாலை 6 மணிக்கு, மேற்படி மன்றத்தில், திரு. சோம. லெ. தலைமையில், திரு ஏ எஸ். ஏ. சாமி, 'சினிமா பார்க்காதே!' என்பது பற்றி பேசுவார்.

எட்டடி பாயும்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

குறிப்பிட்ட மதிப்பீட்டிற்கும் அதிகமாக அந்த 'காண்டிராக்ட'ருக்குப் பணம் தரப்பட்டிருக்கிறது. வேலை செய்து முடிக்கு முன்பே, 'காண்டிராக்டர்' காணப்படவில்லை.

காண்டிராக்டர் மொத்தமாக ரூ. 91,404 அதிகம் பெற்றுக் கொண்டு காணமற் போய்விட்டதாயும், எஞ்சிய வேலையை பொது மராமத்து இலாகா செய்து முடித்ததாயும், செய்யப்பட்ட வேலையும் மிகத் தரக் குறைவாயிருந்ததாயும், போலீசார் தேடியும் காண்டிராக்டர் அகப்படவேயில்லை என்றும், தணிக்கை அறிக்கை தகவல் தருகிறது.

'காண்டிராக்டர்' எடுத்திட்ட ரொக்கத் தொகை ரூ. 91,404, மற்றும் ரூ 13,900 மதிப்புடைய சிமெண்டு, போக்குவரத்துசாமான் முதலியவை, சர்க்காரால் இப்போது, 'வராத கணக்கில்' எழுதப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை கூறுகிறது.

'வராத கணக்கில்' எழுத அங்கீகாரம் பெறப்படாததுடன், இம்மாதிரி பொது மக்கள் பணம் நஷ்டமாவதற்குக் காரணமாயிருந்த அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் எதும் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரியவில்லை என்றும் தணிக்கை அறிக்கை அறிவிக்கிறது.

வட நாட்டிலுள்ள நாசிக் அச்சுக்கூடத்தில்!

உற்பத்தி சக்தியைப் பெருக்க இந்திய சர்க்கார் முடிவு

நாசிக்கில் உள்ள இந்திய சர்க்கார் அச்சுக்கூடத்தில், ரூ. 15 லட்சம் செலவில், மற்றுமொரு இயந்திர சாதனத்தை அமைப்பதன் மூலம், அதன் உற்பத்தி சக்தியைப் பெருக்குவதென இந்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.